**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.53/2022**

பெயர்-திருமதி.கெம்பமணி நாள்.02.12.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1.**தமிழில் பேசினால் புரியும். தமிழ் மொழியின் ஓரளவு படிக்க தெரியும். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் பெயர் பசுவராஜ். எனக்கு 1988 திருமணமானது. திருமணத்திற்கு பிறகு எனது கணவர் குடும்பத்திற்கு பாதிக்கப்பட்ட சொத்துக்கள் என்ன என்ன என்று கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. எனது மாமனார் பெயர் கெம்ப தேவர் மகன் நஞ்சப்பா என்றால் சரிதான். நஞ்சப்பனுக்கு 9 மக்கள் ஆவார். அதில் நான்கு ஆண்கள் ஐந்து பெண்கள் என்றால் சரிதான். மேற்படி ஒன்பது பேரும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அனுபவித்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் காலை எண்.374/17B ஆகும். நான் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரத்தில் அவ்வாறு தான் எழுதி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு எனக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லும் பட்டா காலை எண்.374/17B கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் 2 ½ செண்ட் ஆகும். அதில் 1 செண்ட் வீடு கட்டியுள்ளேன். மீதமுள்ள 1 1/2 சென்ட் காலி மனையாக உள்ளது. எனக்கு அரசு கொடுக்கப்பட்ட பட்டா காலையில் 374/17B உள்ளது என்றால் சரியில்ல. நான் தவறுதலாக 374/17B பட்டா கொடுத்ததாக வழக்கு செல்கிறேன் என்றால் சரியில்ல. க.ச.எண்.374/17A சொத்தில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் பிரதிவாதி குடியிருக்கிறார். காலை எண்.374/17B பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 374/17B சொத்தை என்னுடைய கணவர் கடந்த 24.04.1995 பிரதிவாதியின் மகள் சுலோச்சனாவுக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்படி சங்கதிகளை மறைத்து உண்மைக்கு புறம்பாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் உயிரோடு இல்லை.

2.என்னுடைய கணவர் கிரையம் செய்து கொடுத்த ஆவணத்தில் சின்னஞ்சப்பாசத்திற்கும் மத்தியில் தென்படல் சந்திக்கும் தெற்கு என செக்கு பந்தியில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதி சொத்திற்கும் எனது சொத்திற்கும் இடையே சந்து உள்ளது காலை எண்.374 ஆனது 17 A, மற்றும் 17B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. நான் 374/17B யில் குடியிருக்கிறேன். அசல் வழக்கை எனக்கு உண்டான சொத்து எனக்கு வேண்டும் என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். க.ச.எண். 374/17A குடியிருப்பதாக நான் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது தவறுதான். பிரதிவாதிக்கு 85 வயது என்றால் சரிதான். வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு எனது வீட்டை புதுப்பித்து கட்டினோனா என்றால் இல்லை. 85 வயதான பிரதிவாதி எனது அனுபவத்தை தடுத்தாக வழக்கிற்ககாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு பாதிக்கப்பட்ட இடத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல நான் தான் அவருடைய அனுபவத்தை இடையூறு செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

3.பிரதிவாதிக்கு அவருடைய சொத்து எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியாது. அசல் வழக்கில் பிரதிவாதி என்ன எதிர்வழக்குறை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது பெயரில் பட்டா வழங்குவதற்கு முன்பு எனது கணவரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் இறப்பிற்கு சுவாதீணத்தை அனுசரித்து எனக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை எனது கணவர் தான் எனக்கு பட்ட வாங்கி கொடுத்தார். தாவா சொத்தில் எனது உரிமையை பிரதிவாதி மறுப்பதால் விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. வழக்கு சொத்தின் தற்போதைய உரிமையாளர் பிரதிவாதியின் மகள் சுலோச்சனா என்பதால் அவரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.நான் தாக்கல் செய்து ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு தொடர்பில் இல்லாதவை என்றால் சரியல்ல எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரி இல்லை.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.12.02 17:07:30 +0530

District Munsif